பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

07 08 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. தேசிய அளவில் சுகாதாரத்துறைக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் அலுவலக இணை அமைச்சர் திரு ஜிதேந்திசிங் தெரிவித்துள்ளார்.

2. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அமைச்சர் திரு ஜெய்சங்கரிடம் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

3. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துவது தொடர்பாக மத்திய அமைச்சரை சந்தித்து வலியுறுத்த இருப்பதாக மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

4. மேட்டூர் அணையிலிருந்து 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றப்படுவது இன்று அதிகாலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் மல்யுத்த பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகத் இன்று இறுதி சுற்றில் பங்கேற்கிறார்.

---- இனி விரிவான செய்திகள் ----

**[]<<<>>>[]**

தேசிய அளவில் சுகாதாரத்துறைக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் அலுவலக இணை அமைச்சர் திரு ஜிதேந்திசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று உலக மருத்துவ தொழில்நுட்ப மாநாட்டில் பேசிய அவர், வரும் 2047-ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பார்வையில் சுகாதாரத்துறை தேசிய முக்கித்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதாகக் கூறினார்.

சுகாதார அறிவியல் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாதனைகள் மற்றும் உயிரி தொழில்நுட்ப துறையின் முயற்சிகளை அவர் எடுத்துரைத்தார்.

உயிரி தொழில்நுட்பம் தொடர்பான உற்பத்தி கடந்த பத்து ஆண்டுகளில் பெருமளவு அதிகரித்து 130 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதாகவும் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பத்தாவது தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கைத்தறித்துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய நெசவாளர்களுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

கைத்தறி பாரம்பரியம் தொடர்பான புத்தகம் ஒன்றையும் அவர் வெளியிடுகிறார்.

மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டம் நல்லம்பட்டியைச் சேர்ந்த நெசவாளர் பாலகிருஷ்ணன் தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளர்.

இந்த விருது கிடைத்திருப்பது தங்களது திறமைக்கு கிடைத்த அங்கீகாரம் என்றும், இது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - பாலகிருஷ்ணன் ) -30--- செகண்ட்*

[]<<<>>>[]

இலங்கை கடற்படையின் ரோந்து படகு மோதியதில் கடலில் மூழ்கி காணாமல் போன ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்திற்கு பத்து லட்சம் நிதி உதவி வழங்க முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒன்றாம் தேதி ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையின் ரோந்து படகு மோதியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மூன்று மீனவர்களை இலங்கை கடற்படை ஒப்படைந்த நிலையில், ஒரு மீனவர் காணாமல் போனதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அமைச்சர் திரு ஜெய்சங்கரிடம் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

நேற்று புதுதில்லியில் திரு ஜெய்சங்கரை திமுக மக்களவை குழு தலைவர் திருமதி கனிமொழி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து இந்த கோரிக்கையை வலியுறுத்தினர்.

இந்த குழுவில் இடம்பெற்ற மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் இது தொடர்பான கோரிக்கை முனு ஒன்றை திரு ஜெய்சங்கரிடம் வழங்கினார்.

இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களை விடுவிப்பதுடன், அவர்கள் எதிர்கொண்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துவது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சரை நேரில் சந்தித்து வலியுறுத்த இருப்பதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் கல்லந்திரியில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஐந்து கட்டிடங்களை அமைச்சர் திரு பி மூர்த்தியுடன் இணைந்து திறந்து வைத்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) ---- 25 செகண்ட்*

நாட்டிலேயே வலுவான மருத்துவ கட்டமைப்பு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாகவும், இதனை மேலும் வலுப்படுத்த தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தஞ்சாவூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் துவாக்குடி முதல் பால்பண்ணை வரை உயர்மட்டச்சாலை அமைக்கும் பணிகளை அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு காணொலி வாயிலாக நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

சுமார் 56 கிலோமீட்டர் தூரத்திற்கு நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்டுள்ள இந்த பகுதியில் 14 கிலோமீட்டர் நீளத்திற்கு நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள பொதுமக்கள் ஆட்சேபம் தெரிவித்ததால் சேவை சாலை இல்லாமல் அந்த சாலை அமைக்கப்பட்டது.

இதையடுத்து அங்கு நான்குவழி உயர்மட்ட சாலை அமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

உணவுப் பொருள் சேமிப்பு கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு வரும் பொருட்களின் அளவு குறையும்பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில கூட்டுறவு மற்றும் உணவுத்துறை முதன்மைச் செயலர் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் அருகே திருமழிசை பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சேமிப்பு கிடங்கினை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலம் முழுவதிலும் உள்ள 34 ஆயிரம் நியாயவிலைக் கடைகளும் புதுப்பிக்கப்பட்டு நவீனமாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ராதாகிருஷ்ணன் ) -43---- செகண்ட்*

**[]<<<>>>[]**

மேட்டூர் அணை நிரம்பியுள்ள நிலையில், அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவது எட்டு நாட்களுக்குப் பிறகு இன்று அதிகாலை ஐந்து மணி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

காவிரியில் மேட்டூர் அணைக்கு வரும் உபரி நீரின் அளவு குறைந்ததால் மேட்டூர் அணையின் 16 கண் மதகுகள் வழியாக திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -48--- செகண்ட்*

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு பெற்ற திரு முகமது யூனுசை அந்நாட்டு அதிபர் திரு முகமது சகாபுதின் நியமித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவராக **Yehya sinwar** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நேபாளத்தின் **Baglung** பகுதியில் நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது.

**[]<<<>>>[]**

லிபியா நாட்டிற்கு அவசிய தேவையின்றி பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டுமென்று வெளியுறவுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

பாரத ஸ்டேட் வங்கியின் தலைவராக திரு சி எஸ் ஷெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

குஜராத் மாநிலத்தில் உள்ள 45 அணைகளும் நிரம்பும் தருவாயில் உள்ளதால் அணைகளையொட்டியுள்ள பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் புதிய பசுமைவெளி விமான நிலையம் அமைப்பதற்கு நில எடுப்புப் பணியில் பாதிக்கப்படும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யவுள்ள கிராமங்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

மயிலாடுதுறையில் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலையோரம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருநத விளம்பர பதாகைகள் மற்றும் கடைகள் அதிகாரிகள் முன்னிலையில் அகற்றப்பட்டன.

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான்கு லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி பூங்கொடி நேற்று அனுப்பி வைத்தார்.

[]<<<>>>[]

சென்னை மாவட்ட சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய தொழில் முனைவோர் சுற்றுலா விருதுபெற இம்மாதம் 20-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் மல்யுத்த பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகத் இன்று இறுதி சுற்றில் பங்கேற்கிறார்.

மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் அவர் பங்கேற்கிறார்.